## மாத்தறை பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மாத்தறை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டு ரூபா 107,477 இற்கான களஞ்சியப் பொருட்கள் 38 விடயங்களின் பெறுமதி கணக்குகளுக்காக எடுக்கப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டிலும் அதனை சரி செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |
| (ii) | முன்னைய ஆண்டிற்கான பெற வேண்டிய ரூபா 74,838,385 இற்கான நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் ரூபா 32,588,636 இற்கான முத்திரைக் கட்டணம் என்பவற்றை கணக்கீடு செய்திருக்க வில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |
| (iii) | மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து பூர்த்தி செய்திருந்த கெக்கனந்துர வாராந்த சந்தை கழிப்பறை முறைமைக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 685,989 இற்கான தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 348,156 தொகை பெறுமதியான உபகரணங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக மூலதனப்படுத்த வேண்டும். | 2019 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |
| (v) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்பட்டோர் ரூபா 287,925 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப் பட்டிருந்தது. | கடன்பட்டோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |
| (vi) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 563,373 தொகைக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |
| (vii) | மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய பலவினச் செலவுகள் ரூபா 154,161 தொகை க்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய செலவுகள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |
| (viii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஊழியர் பிணை வைப்பு மீதி ரூபா 40,057 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |
| (ix) | அறிவித்தல் பலகைகளுக்காக மீளாய்வாண்டு திசெம்பர் 17 திகதி கிடைத்திருந்த ரூபா 60,000 காசோலை மதிப்பளிக்கப்பட்டிருக்காததுடன் அது தொடர்பாக கணக்குகளுக்கு சீராக்கல் மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றில் தேறப்படாத காசோலைகள் என காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வேன். |

**(ஆ) நிகழக் கூடிய பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 2,704,750 பெறுமதியான சபையின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணி தொடர்பாக பிரதேச சபைக்கு எதிராக SPL 644 இன் கீழ் நபர் ஒருவரினால் மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு தொடர்பாக நிதிக்கூற்றுக்ளின் மூலம் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | நிகழக் கூடிய பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் படவில்லை. | 2019 நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்வேன் |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 61,975,762 தொகைக்கான 06 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 16,471,961 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதி களில் வித்தி யாசங்களை இணக்கஞ் செய்து கணக் குகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள 06 கணக்கு விடங்கள் தொடர்பான மீதி மற்றும் அட்டவணை களின் மீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை யால் கூட்டுத்தொகை ரூபா 171,453,555 தொகைக்கான 13 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக் களில் காட்டப் பட்டுள்ள கணக்கு மீதி களை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | முறைப் பிரகாரம் நாளது வரை ஆக்கப் பட்டு ஆவணங்கள் பேணப்படுவதற்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக் கணித்துள்ள நபர்கள் தொடர் பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணைகளின் அட்டவணை தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வீதவரி செலுத்துவதை புறக்கணித்துள்ள நபர்கள் தொடர்பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை கள் அட்டவணை தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| (ii) விதி 143 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் பேரேடு மாதாந்தம் கூட்டப்பட்டு கூட்டுத்தொகை பிரதான பேரேட்டுக் கணக்கு டன் சீராக்கல் செய்யப்பட் டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உரிய சீராக்கல்கள் எதிர்காலத்தில் மேற் கொள்ளப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கின்றேன். |
| (iii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவு களுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்கு களுடன் சமர்ப்பித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் தயாரித்து சமர்ப்பிக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சன நாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி.237 | கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் தொடர்பான உரிய அனைத்து அட்டவணைகள் உறுதிச் சான்றுடன் இணைக்கப் பட வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிரு க்கவில்லை. | நிதிப் பிரமா ணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நி.பி.237 இன் பிரகாரம் உறுதிச் சான்றுடன் அனைத்து அட்டவணைகளையும் இணைப்பதற்கு செயற் படுத்துகின்றேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,052,831 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 36,726,325 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 5,490,330 | 6,288,696 | 4,257,985 | 7,762,653 | 5,409,360 | 6,660,213 | 4,957,467 | 5,731,942 |
| வாடகை | 2,053,100 | 2,279,621 | 2,238,743 | 399,813 | 2,143,100 | 1,670,214 | 1,701,914 | 358,935 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,195,100 | 3,189,741 | 3,189,741 | -- | 1,423,920 | 2,496,940 | 2,496,940 | -- |
| ஏனைய வருமானங்கள் | 21,173,700 | 22,058,212 | 29,565,277 | 28,992,935 | 19,368,500 | 31,045,213 | 22,045,213 | 36,500,000 |
| மொத்தம் | 29,912,230 | 33,816,270 | 39,251,746 | 37,155,401 | 28,344,880 | 41,872,580 | 31,201,534 | 42,590,877 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 29,912,230 தொகை யாகும். மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 42,590,877 இற்கான நிலுவைத் தொகை மற்றும் சிட்டையிடல் ரூபா 33,816,270 தொகை உடன் ரூபா 76,407,147 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 39,251,746 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 37,155,401 ஆகும். அறவீடுகளின் முன்னேற்றம் 51 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டிற்கான ஆரம்ப வீதவரி நிலுவை ரூபா 5,717,367 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 5,055,953 தொகை ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 10,773,320 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 3,027,075 தொகை ஆகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 7,746,245 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. மொத்த அறவீடுகள், ஆரம்ப மீதியில் மற்றும் சிட்டையிடல்களின் 28 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | 2019 ஜூன் 01 ஆந் திகதியும் நடமாடும் சேவை ஒன்று நடாத்துவதற்கு ஒழுங்குபடுத்தி யுள்ளேன். |

**(ஆ) ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 14,575 தொகையாக காணப்பட்ட துடன், ஆண்டிற்கான சிட்டையிடல் (கட்டணம் மற்றும் தண்டப்பணமுடன்) ரூபா 2,888 தொகையாகக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,054 தொகையாகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 16,409 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள், ஆரம்ப நிலுவை மற்றும் சிட்டையிடலில் 06 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பதிவேட்டில் காணப்படும் விலாசங்கள் மற்றும் உரிமையாளர்களை சரியாக நாளது வரை ஆக்குவதற்காக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப் பட்டு தகவல்கள் சரிசெய்யப்பட வேண்டும் என வருமானக் குழு அறிவித்துள்ளது. |

## 2.2.4 வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 358,935 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 1,382,610 தொகை ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,741,545 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப் பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 1,343,908 தொகை ஆக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 397,637 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | இந்த நிலுவைத் தொகை நீண்ட காலமாக நிலுவையாக காணப்படும் மீதி ஒன்றாக காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பணம் உரிய முறையில் கிடைத்துள்ளன. |

## 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 8,992,935 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 20,000,000 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை பெறுவதற்காக பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு எழுத்துமூல மற்றும் வாய்மொழி மூலம் கோரிய போதிலும் தாமதம் ஒன்று காணப்பட்டது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பாய்வு

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1980 இன் 47 ஆம் இலக்கங் கொண்ட தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23(ஈ) பிரிவுகளின் கீழ் ஏதேனும் இடைநிறுத்தலுக்காக அல்லது இரத்து செய்வதற்கு கீழ்பட 03 வருட காலத்திற்கு மிகைக்காத வாறு அனுமதிப்பத்திரத்தில் அறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்காக செல்லுபடியாக இருக்க வேண்டுமெனினும் 03 வருட காலத்தை மிகைத்துள்ள 16 வியாபார நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை புதுப்படுத்தி யிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்பட வேண்டும். | வியாபார நிறுவனங்கள் தொடர்பாக அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் 03 வருட காலம் முடிந்த பின்னர் மீண்டும் அனுமதிப்பத்திரத்தை புதுப்படுத்து வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபை யினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்கு களை நெருங்கு வதற்கான நிகழ் ச்சித் திட்டங்கள், திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | சபையினால் தயாரிக்கப்பட் டுள்ள நான்கு வருட திட்டத்தின் மூலம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்கு தொடர்பாக கவனம் செலுத்தி அவற்றை நெருங்கு வதற்கு தேவையான விஷேட நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 29 ஆம் திகதிய 2052 ஆம் இலக்க வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தல் தொடர்பாக 2019 மார்ச் 29 திகதி மேற்கொள் ளப்பட்ட வெளிக்கள பரிசோதனை யின் போது பொருத்தப்பட்டு காட்சிப்பட்டிருந்த 34 அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா 2,526,100 இற்கான கட்டணம் அறவிடப் பட்டிருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | தனியார் நிறுவனம் ஒன்றினால் 30 பதாதைகளுக்காக 2019 மார்ச் 18 திகதி ரூபா 24,750 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், 2019 மார்ச் 29 திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் போது கெக்கனந்துர யடியன பாதையில் மாத்திரம் 63 பதாதைகள் காட்சிப் படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பாதையின் மூலம் மாத்திரம் ரூபா 64,350 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் ஏனைய பாதைகளிலும் அந்த கம்பனியினால் காட்சிப்படுத்தியிருந்த அறிவித்தல் பலகைகளின் மூலம் கட்டணம் அறவிட்டிருக்கவில்லை. | அனைத்து அறிவித்தல் பலகைகளுக் காக கட்டணம் அறவிடப்பட வேண்டும். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 09 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 08 மிகை பதவியணியினை முறைப்படுத்து வதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | பதவியணியின் மிகை பதவி களை முறைப் படுத்துவதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் வேண்டியுள்ளது. | கன ரக வாகனங்களின் செலுத்துனர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள எவரும் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்திருக்கா ததுடன் மீண்டும் வர்த்தமானி யில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மீதியான |

| | | | |
|---|---|---|---|
| | | | பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. உத்தியோகத்தர்கள் மிகையாக இருப்பது தொடர்பாக இலக்கம் மாறை/பபசகொ/2/1 கடிதத்தின் மூலம் உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மார்ச் 19 திகதிய த.பா.ச/15 ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுரை கடிதத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொந்தமான அனைத்து ஆதனங்களினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் சிக்கல் தன்மை நிலைமையுள்ள காணிகளை அளவை செய்து எல்லைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | அறிவுரை கடிதத்தின் படி செயற்பட வேண்டும். | பிம் ஸவிய வேலைத் திட்டத்தின் கீழ் சபைக்குச் சொந்தமான காணியின் அளவை செய்யும் அலுவல்களை மேற்கொள்ளப் பட்டுவருவதுடன் பிரதேச சபையினாலும் காணி அளவை செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப் படுகின்றது. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 11 காணித் துண்டுகள் தனியார் தரப்பினின் அங்கீகாரமின்றி அனுபவிக்கப்பட்டு வருகின்றன. | அங்கீகாரமற்ற வதிவோர் அகற்றப்பட வேண்டும். | சபைக்கு சமர்ப்பித்து நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 செலவு விடயங்களில் சேமிப்புக் களின் கூட்டுத்தொகை ரூபா 16,432,842 தொகையாகக் காணப் பட்டதுடன், அப்பெறுமதிகள் 7 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | செயல்முறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | கடந்த 05 ஆண்டுகளில் அனைத்து வருமானங்கள் மற்றும் செலவுகளை கவனத்தில் எடுத்து உரிய தரப்பினர் பங்குபற்றலுடன் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருமான விடயமொன்றினை நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 8,033,187 தொகையாக இருந்ததுடன், அவை 16 சதவீதத்தில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | கடந்த 05 ஆண்டுகளில் அனைத்து வருமானங்கள் மற்றும் செலவுகளை கவனத்தில் எடுத்து உரிய தரப்பினர் பங்குபற்றலுடன் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென்மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. நிதிப் பிரமாணம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி இணக்கத்தை பெற்று இருந்ததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கை களின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. | உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் போதியளவு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப் பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன் |